# பன்வில பிரதேச சபை

## கண்டி மாவட்டம்

## 1. நிதிக் கூற்றுக்கள்

### 1.1 நிதிக் கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2012 மே 16 ஆந் திகதியும் முன்னைய ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2011 மார்ச் 29 ஆந் திகதியும் கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2012 செப்தெம்பர் 17 ஆந் திகதி சபையின் தலைவருக்கு அனுப்பிவைக்கப்பட்டது.

### 1.2 அபிப்பிராயம்

எனது பரிசீலனைகளிலிருந்து தென்படுவதும் எனக்களிக்கப்பட்ட அதி உயர் தகவல்கள், விளக்கங்கள் என்பவற்றிற்கமையவும் பன்வில பிரதேச சபையின் 2011 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்காக உரிய கணக்கு அறிக்கைகள் பேணப்பட்டுள்ளன என்றும் தலைவருக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ள எனது அறிக்கையில் சுட்டிக் காட்டப்பட்டவாறான விடயங்களின் மூலம் நிதிசார் கூற்றுக்களில் ஏற்படும் தாக்கங்களைத் தவிர, 2011 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பன்வில பிரதேச சபையின், செயற்பாட்டு நிலவரத்தையும் அத்தினத்தில் முடிவடைந்த ஆண்டிற்கான அதன் செயற்பாட்டு விடயங்களின் நிதிப் பெறுபேறுகள் உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் தோற்றும் விதத்தில் பொதுவாக அங்கீகரிக்கப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கேற்ப நிதிசார் கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டிருந்தன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

மீளாய்வாண்டின் போது சபைக்குச் சொந்தமானி காணிகள் மற்றும் 36 கட்டிடங்கள் என்பவற்றின் பெறுமதி மதிப்பீடு செய்யப்பட்டு கணக்குகளுக்குக் கொண்டுவரப்பட்டிருக்கவில்லை.

### 1.3.2 கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை

தேவையான தகவல்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படாமையால் ரூபா 15,458,909 கூட்டுத்தொகையான கொடுக்கல் வாங்கல்களை கணக்காய்வின் போது திருப்திகரமாகச் சான்றுறுதிப்படுத்த முடியாதிருந்தது.

## 2. நிதி மற்றும் செயற்பாட்டு மீளாய்வு

### 2.1 நிதிப் பெறுபேறுகள்

சமர்ப்பிக்கப்பட்டுள்ள நிதிக் கூற்றுக்களின் பிரகாரம், 2011 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டின் போது சபையின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 377,301 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டிற்கான மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 1,102,479 ஆக இருந்தது.

### 2.2 வருமான நிருவாகம்

### 2.2.1 மதிப்பீட்டு வருமானம், உள்ளவாறான வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

தலைவரினால் மீளாய்வாண்டின் பொருட்டு சமர்ப்பிக்கப்பட்டிருந்த மதிப்பிடப்பட்டிருந்த வருமானம், உள்ளபடியான வருமானம், நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காட்டப்பட்டுள்ளது.

| | வருமான விடயம் | மதிப்பிடப்பட்டது | உள்ளவாறானது | திசெம்பர் 31 இல் திரண்ட நிலுவை |
|---|---|---|---|---|
| | | ரூபா (000) | ரூபா (000) | ரூபா (000) |
| (i) | வீதவரியும் வரியும் | 1,616 | 1,419 | 562 |
| (ii) | வாடகை | 947 | 824 | 163 |
| (iii) | அனுமதிப்பத்திரக் கட்டணம் | 625 | 747 | 65 |
| (iv) | ஏனைய வருமானம் | 11,223 | 9,382 | 273 |

### 2.2.2 நீதிமன்ற தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்

மாகாண சபையின் பிரதம செயலாளரிடமிருந்து 2011 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கிடைக்கவேண்டிய தொகை கீழே காட்டப்படுகின்றது.

| | | ரூபா |
|---|---|---|
| (i) | நீதிமன்ற தண்டப்பணம் | 216,385 |
| (ii) | முத்திரைக் கட்டணம் | 384,840 |

### 2.2.3 நீர்க்கட்டணம்

2011 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு நிலுவை நீர்க் கட்டணம் ரூபா 51,733 தொகை தொடர்பாக நீர் வழங்கலுக்கான உடன்படிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.2.4 கடை வாடகை

2011 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்வாவாறு நிலுவைக் கடை வாடகை ரூபா 115,853 தொகையை உடன்படிக்கையின் பிரகாரம் அறவிடுவதற்காக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. 02 வருட காலமாக அறவிடப்படாது காணப்பட்ட மீதி ரூபா 79,651 ஆகும்.

### 2.2.5 சுற்றாடல் அனுமதிப்பத்திரக் கட்டணம்

(i) 1980 இன் 47 ஆம் இலக்க தேசிய சுற்றாடல் அதிகாரச் சட்டத்தின் கீழ் மத்திய சுற்றாடல் அதிகாரசபையினால் விநியோகிக்கப்பட்ட 2008 சனவரி 15 ஆந் திகதிய 1523/16 ஆம் இலக்க அதிவிஷேட வர்த்தமானி அறிவித்தலின் பிரகாரம் நடவடிக்கை எடுக்காமையினால் சுற்றாடல் அனுமதிப்பத்திரக் கட்டணம் ரூபா 20,000 நிலுவை காணப்பட்டது.

(ii) சுற்றாடல் பாதுகாப்பு அனுமதிப்பதிரக் காலம் நீடிக்கப்படாத மற்றும் புதிதாக சுற்றாடல் பாதுகாப்பு அனுமதிப்பத்திரம் பெறவேண்டிய வியாபார நிலையங்கள் தொடர்பாக சுற்றாடல் உத்தியோகத்தரினால் பரிசோதனை செய்யப்பட்டு

அனுமதிப்பத்திரம் விநியோகிப்பதற்குத் தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டிராததுடன் 2012 மார்ச் 14 ஆந் திகதியில் உள்ளவாறு சுற்றாடல் அனுமதிப்பத்திரம் பெறவேண்டிய 57 வியாபார நிலையங்கள் காணப்பட்டமை அவதானிக்கப்பட்டன.

### 2.2.6 கட்டிட வாடகை

சபைக் கட்டிடத்தின் கீழ் மாடியில் 2009 ஒக்தோபர் 01 ஆந் திகதி தொடக்கம் 02 வருடங்களுக்காக மக்கள் வங்கிக்கு உடன்படிக்கையின் அடிப்படையில் வாடகைக்கு வழங்கப்பட்டிருந்த போதிலும் மூன்று மாத வாடகையாக ரூபா 61,500 வைப்புப் பணம் உடன்படிக்கையின் பிரகாரம் சபையினால் பெறப்பட்டிருக்கவில்லை.

### 2.2.7 ஆதனவரி, ஏக்கர் வரி, அனுமதித்திரக்கட்டணம்

மீளாய்வாண்டின் இறுதியில் அறவிடவேண்டிய ஆதனவரி ரூபா 125,182 , ஏக்கர் வரி ரூபா 39,695 மற்றும் அனுமதிப்பத்திரக் கட்டணம் ரூபா 23,324 தொகைகளை 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச் சட்டத்தின் 158(1), 159(1) மற்றும் 132(4) ஆம் பிரிவுகளின் ஏற்பாடுகளின் பிரகாரம் அறவிடுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.3 செயற்பாடற்ற வளங்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) தனியார் நிறுவனமொன்றிலிருந்து நன்கொடையாக சபைக்குக் கிடைத்த டபிள்யூபீஎம்எம் – 9795 ஆம் இலக்க மோட்டார் சைக்கிலின் வாகன அடையாள அட்டை காணப்படாமையின் காரணமாக அந்த வாகனத்தின் வருமான அனுமதிப்பத்திரத்தைப் பெற்றுக்கொள்ள முடியாமையின் காரணமாக 2007 ஆம் ஆண்டு தொடக்கம் சபையின் பயன்பாட்டிற்கு எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) கழிவுப் பொருள் முகாமைத்துவதத்திற்காக டபிள்யூபீ- 2808 ஆம் இலக்க கைரெக்டர் மற்றும் ரேலர் 2008 ஆம் ஆண்டில் உள்ளூராட்சி, மாகாண சபைகள் அமைச்சினால் பிரதேச சபைக்கு வழங்கப்பட்டிருந்த போதிலும் 4 வருடம் மட்டிலான காலமாக எவ்வித பயன்பாட்டிற்கும் எடுக்கப்படாமல் சபை வளவில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது.

## 2.4 அறவிடவேண்டிய ஊழியர் கடன்

2011 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு அறவிட வேண்டியிருந்த ஊழியர் கடன் முற்பண மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 1,398,214 ஆக இருந்தது.

## 3. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டப்பாட்டுப் பகுதிகளில் விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) கணக்கீடு
(ஆ) உள்ளகக் கட்டுப்பாடு
(இ) பாதீட்டுக் கட்டுப்பாடு
(ஈ) வருமான நிருவாகம்
(உ) இருப்புக் கட்டுப்பாடு
(ஊ) கடன்பட்டோர் மற்றும் கடன்கொடுத்தோர் கட்டுப்பாடு